

# வாரந்தோறும் ஒரு தீபம்!

## உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

## (சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| | |
|---|---|
| 11.01.2018 | **௨.ஒரு மேய்ப்பனின் இதயம் விசாலமாக வேண்டும்!** |



"**பி**லிப்பிய சபை மக்களைத் தன் இருதயத்தில் வைத்திருப்பதாக" பவுல் கூறினார் (பிலி.1:7). "தங்களுக்கென பிழைத்திருக்கிறவர்கள்" நெஞ்சத்தில், தானும்-தன் கனமுமாகிய, சுய நலமே குடிகொண்டிருக்கும். அந்த இருதயத்தில் "அருகிலிருந்து தன்னைப் பகைக்கும் அயலான் கூட" (ஏதோ தவறு செய்த சொந்த மனைவி, கணவன்கூட) இருந்திட முடியாது! பவுல் குறிப்பிடுவது போல், ஒரு ஊரில் உள்ள சபையின் மக்கள் அனைவரும் அந்த சபை மூப்பனுடைய இருதயத்தில் குடிகொள்ள வேண்டுமென்றால், அந்த இருதயம் எத்தனை விசாலம் கொண்டதாய் இருக்க வேண்டும்!? சுய -நல சுமையிலேயே இருதயம் நசுங்குண்டோர்களுக்கு **'பிறரை சுமக்கும்' பாக்கியம்** எப்படி கிட்டும்?

ஜனங்களுக்காக நெஞ்சில் பாரமும் கரிசனையும் கொண்டிருப்பதே, கர்த்தருடைய ஊழியனுக்குரிய மாறாத பங்காயிருக்கிறது! இது இல்லாமல், பிரசங்கம் செய்ய விரும்புவதும், ஜனங்களை ஆளுகை செய்ய விரும்புவதும்... வெறும் பரிசேயத்துவமென்றும், அஞ்ஞானமென்றும் இயேசு குறிப்பிட்டார்! (மத்தேயு.23:1,2;லூக்கா.22:25). இவர்கள் 'ஜனங்களுக்குள் (மந்தைக்குள்) புகுந்துவிட்ட' கூலிக்காரர்கள், மெய்யான மேய்ப்பர்கள் அல்ல! எனவும் இயேசு திட்டவட்டமாக கூறினார்!! (யோவான்10). மந்தையைப் பாதுகாப்பதும், தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுப்பதும்..... விசால இதயம் கொண்ட மேய்ப்பர்களின் பங்கு என இயேசு கூறி மகிழ்ந்தார்!

**– ரத்னம்**